Registered as a News Paper in Sri Lanka;

பக்கங்கள் 04 விலை ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஷூ மீ ஆடி 2 ஆம் உ புதன்கிழமை (18 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஂ 24 ஓசை 150

## புலிக்கொடிபோல் தெரியும் தேசிய கொடியை கீழிறக்க உத்தரவு!

நெடுந்தீவு, நயினாதீவு படகுச்சேவையைச் சீராக நடாத்துவதற்கு ஸ்ரீலங்கா கடற்படையினர் புதிய விதிமுறைகளைக் கைக்கொள்ளுமாறு படகுக்காரருக்கு உத்தரவு விதித்துள்ளனர்.

இந்தப்படகுகளில் வெள்ளைக்கொடியுடன் ஸ்ரீலங்காவின் தேசிய கொடியும் பறக்கவிடப்படவேண்டும் என்பதே அந்த புதிய விதியாகும்.

இதனையடுத்து படகுக்காரர்கள் தேசிய கொடியை தேடி அலைகின்றனர்.

நேற்று முன்தினம் இதன்படி தேசியக்கொடியை உயரமாகவும், அதன்கீழே வெள்ளைக் கொடியையும் கட்டிவந்த படகை மறித்த கடற்படையினர் தேசிய கொடியை தூரத்தில்பார்க்கும்போது புலிக்கொடிபோல தெரிவதாகவும் அதனால் வெள்ளைக்கொடியை மேலேயும், தேசியக்கொடியை கீழேயும் கட்டிவருமாறும் கூறினார்கள். (62)

## அம்பாறையில் இராணுவம் புலிகள் கடும் மோதல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் அலந்தலாவை என்ற எல்லைப்புறத்தில் சிறிலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கடந்த இரண்டு தினங்களாக கடும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் அலந்தலாவை என்ற இடத்தில் முப்பத்தைந்தாம் ஊரில் சிறிலங்கா இராணுவத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் தாக்குதல் நடத்தினர். இத் தாக்குதல் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இச்சண்டையில் ஒரு ஸ்ரீ


(4 ஆம் பக்கம் பார்க்க)

## அவ்ரோ குண்டுவீச்சிற்கு ஐவர் பலி; வீடுகள் சேதம்

மகுழடித்தீவில் 16 ஆம் திகதி இரவு 10 மணியளவில் அவ்ரோ விமானத்திலிருந்து குண்டு வீச்சுத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

ஐந்து பேர் இச்சம்பவத்தில் பலியாகினர். இருபது வீடுகள் சேதமடைந்தன.





விடுதலைப் புலிகள் இயக்க வீரர்களுக்கு உதவியாக துணைப்படை ஒன்றிற்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. அத் துணைப் படையைச் சேர்ந்த முதியவர்களுக்கும், இளைஞர்களுக்கும் தனித்தனியாக பயிற்சி பெறுவதைப் படத்தில் காணலாம்.

## வீடு வீடாக தேடுதல்

(கொழும்பு)

திருக்கோணமலையில் வீடு வீடாக பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை தொடங்கியிருப்பதாக இராணுவ அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்

## காலை இழந்தார்

(கிளிநொச்சி)

புத்துவெட்டுவானில்இருந்து கொக்காவில் இராணுவ முகாம் வாசலால் சென்ற இளைஞன் ஒருவர் மிதிவெடியில் அகப்பட்டுக் காலை இழந்தார்.

புத்துவெட்டுவானைச் சேர்ந்த இவ்இளைஞன் புத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவீச்சால் 40மாடுகள் பலி

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி 10 ஏக்கர் திட்டத்தில் உள்ள மாட்டுப் பண்ணை ஒன்றின்மேல் பொம்மர் விமானத்திலிருந்து குண்டு

# மாங்குளம்: வெளியேறிய சிறிலங்கா இராணுவம் இழப்புடன் திரும்பியது!

## சக்திவாய்ந்த ஆயுதங்களும் புலிகளால் மீட்பு

(மாங்குளம்)

நேற்றுக்காலை மாங்குளம் இராணுவ முகாமில் இருந்து நாற்புறமும் பெரும் தாக்குதல் நடத்தி ஒரு முனையிலிருந்து வெளியேறிவந்த ஸ்ரீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலால் பெரும் இழப்புக்களுடன் முகாமிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

இத்தாக்குதலில் பெருமளவு விடுதலைப்புலிகளினால் கைப் கள் வீர மரணமடைந்தனர்.

கொக்கட்டிச்சோலை

## விமானக் குண்டு வீச்சில் 5 பேர் பலி; 10 பேர் காயம்

## "தேனீக்களுக்கு" உணவு

(யாழ்ப்பாணம்)

புலம் பெயர்ந்தவர்களுக்கும், அகதிகளுக்கும் உதவும் முகமாக உடைகளும், உலர் உணவும் சேகரிக்கப்பட்டு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் "தேனீக்கள்"

## குண்டுவீச்சில் 40மாடுகள் பலி

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி 10 ஏக்கர் திட்டத்தில் உள்ள மாட்டுப் பண்ணை ஒன்றின்மேல் பொம்மர் விமானத்திலிருந்து குண்டு வீசப்பட்டதால் சுமார் 40 மாடுகள் இறந்துள்ளன.

இதேபோல ஞாயிற்றுக் கிழமை இரத்தினபுரம் பகுதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைது

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினர் கடந்த 16 ஆம் திகதி அன்று மதுரை நாகேந்திரன் (வயது 22) என்பவரை கைது செய்துள்ளனர் (ம)

## நேற்றும் ஒரு சடலம்

(விசேட நிருபர்)

மற்றுமொரு இளம் பெண்ணின் அழுகிய சடலம் நேற்று (17-07-90) குருநகர் தொடர்மாடிப் பகுதியில் கரைஒதுங்கியது.

பச்சை நிற மேற்சட்டையுடன் அச்சடலம் காணப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

(மாங்குளம்)

நேற்றுக்காலை மாங்குளம் இராணுவ முகாமில் இருந்து நாற்புறமும் பெரும் தாக்குதல் நடத்தி ஒரு முனையிலிருந்து வெளியேறிவந்த ஸ்ரீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலால் பெரும் இழப்புக்களுடன் முகாமிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

இத்தாக்குதலில் பெருமளவு இராணுவத்தினர் கொல்லப்பட்ட அதேவேளை நான்கு இராணுவத்தினரின் உடல்கள் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதல் நடவடிக்கையில் மூன்று விடுதலைப் புலிகள் வீர மரணமடைந்தனர். அவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## 82 மி. மீ. மோட்டர் உட்பட பல ஆயுதங்கள் மீட்பு

மாங்குளத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள்;

- 82 மி. மீ, ஸ்ரான்ட் மோட்டர் 1.
- ஆர். பி. ஜி. 1.
- 40 எம்.எம். டொங்கா 1.
- ரீ 81 ரக துப்பாக்கி 1.
- ரீ 56-2 ரக துப்பாக்கி 1.

உட்பட வோக்கி டோக்கி மற்றும் இராணுவ உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

## இருபத்தெட்டு சடலங்களுக்கு இராணுவம் தீ வைத்தது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் மாடறுக்கும் முனை என்னும் இடத்தில் கடந்த 14ஆம் திகதியன்று இருபத்தி எட்டுக் கைதிகளின் உடல்களை சிறிலங்கா இராணுவத்தினர் தீயிட்டு எரித்துள்ளனர்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது

(4 ஆம் பக்கம் பார்க்க)

பாசமிகு தமிழீழ மக்களுக்கு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினர் விடுத்த 'மண்ணினை மீட்க ஒன்றிணைவோம்' என்னும் தலைப்பிலான அறிக்கை நாளை முழுமையாக வெளிவரும்.

## கைக்குண்டுக்கு ஒருவர் பலி

(நயினாதீவு)

நயினாதீவு கடற்படை முகாமுக்கு அருகில் வசித்து வந்த துரைராசசிங்கம் என்பர் நித்திரையாக இருந்த போது கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகி மரணமானதாக அறிவிக்கப்படுகிறது.

கொக்கட்டிச்சோலை

## விமானக் குண்டு வீச்சில் 5 பேர் பலி; 10 பேர் காயம்

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலையில் 16 ஆம் திகதி அவ்ரோ விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல் நடாத்தியுள்ளன.

இத் தாக்குதலால் ஐந்து தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன், பத்துப் பேர் வரை படுகாயமடைந்தனர். ஐந்து வீடுகளும் சேதமடைந்துள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

முகமாக உடைகளும், உலர் உணவும் சேகரிக்கப்பட்டு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் "தேனீக்கள்" நடாத்தும் முகாமில் உள்ள இடம் பெயர்ந்தோர்க்கு நேற்று வழங்கப்பட்டது.

## மூன்று தமிழ் விவசாயிகள் ஜிகாத்தால் படுகொலை

நாவிலன்வெளி என்ற இடத்தில் கடந்த பதின் நான்காம் திகதிவயல்வேலைக்குச்சென்ற மூன்றுதமிழ் விவசாயிகள்ஜிகாத்தியக்கத்தால் படுகொலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி. தொடரும் குண்டுவீச்சு அனாதைஇல்லம்; நீதிமன்றம் சேதம்

கிளிநொச்சியிலுள்ள அனாதை இல்லங்களில் மிகப்பெரியதும், ஆங்கிலேயப் பெண்மணியான ஹட்சன் அம்மையாரினால் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக நடாத்தப்பட்டு வருவதுமான "கருணா நிலையம்" பெண்கள் அனாதை இல்லம் நேற்று நடைபெற்ற குண்டுவீச்சினால் பலத்த சேதமடைந்தன. அதற்கு முன்னாலுள்ள நீதி மன்றக் கட்டடமும் சேதமடைந்துள்ளது. தனியார் வைத்தியசாலைக் கட்டடம் ஒன்றும் சேதமடைந்தது.

நேற்றுக்காலை 11 மணியிலிருந்து இரவு 7-30மணி வரை 5 குண்டு வீச்சு விமானங்கள் கிளிநொச்சியிலிருந்து கொக்காவில் வரை உள்ள சுமார் 10கட்டை தூரம் சுற்றிச்சுற்றி வட்டமிட்டு குண்டு மாரி பொழிந்தன. இதனால் அரசாங்கக் கட்டடங்கள், தனியார் வீடுகள், வர்த்தக நிலையங்கள் ஆகியன சேதமடைந்தன. கனிஷ்ட மகாவித்தியாலயமும்பலத்தசேதமடைந்தது

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பிரச்சினையில் அந்நிய சக்திகள் தலையீடு!

## தெற்காசிய பாதுகாப்புக்கே ஆபத்து ஏற்படலாம்என சிறிலங்காவுக்கு எச்சரிக்கை

(புதுடில்லி)

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நடைபெற்றுவரும் சண்டையில் அப்பாவித் தமிழ்ப் பொது மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவது குறித்தும் இப் பிரச்சினையில் அந்நிய சக்திகளின் தலையீடு இருப்பது குறித்தும் இந்திய அரசு இலங்கையிடம் கவலை தெரிவித்திருக்கிறது. அந்நிய சக்திகளின் தலையீடு தெற்காசிய பாதுகாப்பிற்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது.

"இலங்கையிலிருந்து வடக்குக் கிழக்கு நிலைபற்றி உண்மையை" எடுத்துக் கூறுவதற்காக 'சார்க்' நாடுகளுக்குச் செல்லும் "அனைத்துக் கட்சி"த் தூதுக்குழு தனது பயணத்தின் முதல் கட்டமாக புதுடில்லி போய்ச் சேர்ந்திருக்கிறது.

இத்தூதுக்குழு புதுடில்லி போய்ச்சேர்ந்த சமயத்தில் இந்திய ஆளும் தேசிய முன்னணியில் பிரச்சினை ஏற்பட்டுப் பல அமைச்சர்கள் ராஜினாமாச் செய்திருந்தனர்.

இந்நிலையில் இந்திய வெளியுறவுச் செயலர் திரு. துபேயை இலங்கைத் தூதுக்குழு சந்தித்து "உண்மை நிலை" பற்றி எடுத்துக் கூறியது.

இலங்கையில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் நடைபெறும் சண்டையில் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் பலியாவது பற்றியும் இதனால் வடக்குக்கிழக்குப் பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கில் தமிழ்மக்கள் இந்தியாவில் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வருவது பற்றியும் செயலகர் திரு. துபே இந்தியாவின் கவலையைத்தெரிவித்துக்கொண்டார். இதேசமயம் இந்த "உள்நாட்டுச் சண்டை"யில் அந்நிய சக்திகளின் தலையீடு பற்றியும் இந்தியா கவலை கொண்டிருப்பதையும் திரு. துபே இலங்கைத் தூதுக்குழுவுக்கு எடுத்துக்காட்டினார்.

இந்தியவெளியுறவுச்செயலர் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரச்சினையில் அந்நியத் தலையீடு என்றுகுறிப்பிட்டது பாகிஸ்தானையே குறிப்பிடுவதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தின் சபாநாயகர் ஜனாப் எம். எச். முஹம்மது தலைமையில் சென்றுள்ள இலங்கைத் தூதுக்குழுவில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ரணில் விக்கிரம

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் தாக்குதலால் செ.சிலு.சங்க அதிகாரி காயம்

(ஆனையிறவு)

இராணுவத்தினர் மேற்கொண்ட ஆட்டிலறி செல் தாக்குதலில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் காயமடைந்ததுடன் அவ் அதிகாரியின் வாகனமும் பலத்த சேதத்துக்குள்ளாகியது.

ஆனையிறவு முகாமுக்கு நேற்று பதினேழாம் திகதி காலை ஏழு மணியளவில் ஹெலியிலிருந்து போடப்பட்ட உதவிப் பொருட் பார்சல்கள் முகாமுக்கு வெளியே வீழ்ந்தன.

இதனைத் தொடர்ந்து இப் பார்சல்களை எடுப்பதற்கு இராணுவத்தினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்லறி ஷெல் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விமானப் படை முகாமிலிருந்து முனைக்கட்டு கிராமத்தை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடாத்தப் பட்டது.

இதனால் கு. விநாயகமூர்த்தி சி. கணபதிப்பிள்ளை வி. ராஜா, வி. கோவிந்தன் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

# உணவுத் தட்டுப்பாட்டைப் போக்க ஒன்றுபட்டு உழைப்போம்

இன்றைய போர்க்கால நிலைமையில் யாழ்குடாநாடு பெரும் உணவுத் தட்டுப்பாட்டினை எதிர்நோக்கியுள்ளது. யாழ் குடாநாட்டின் உணவுத் தேவையின் பெரும் பகுதியை இதுவரைகாலமும் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவும், வன்னிமாவட்ட அரிசியுமே நிவர்த்தி செய்து வந்தன. தொடரும் சூழ்நிலையில் இவற்றின் விநியோகம் பெருமளவு பாதிக்கப்பட்டு வருவதனால் விரைவில் யாழ் குடாநாடு பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளது. பட்டினிச்சாவிலிருந்து மக்களைக் காப்பாற்ற எமக்குள்ள பிரதான வளம் பனைவளமாகும்.

வடமாகாணத்திலுள்ள சுமார் 4 மில்லியன் பெண் பனைகளிலிருந்து வருடமொன்றுக்கு சுமார் 240, 000 மெட்ரிக் தொன் பனங்களியைப் பெறமுடியும். பனங்களியிலிருந்து பனாட்டு, பனம்பழ ரசவகைகள், பலகாரங்கள் முதலியன தயாரிக்கலாம். முன்பு பல வருடங்களாக எமது மூதாதையரினால் இவையே உணவாகப் பயன்படுத்தப்பட்டன. பின்பு ஏற்பட்ட நாகரிக மாற்றங்களாலும் அந்நிய பொருட்களின் இறக்குமதியாலுமே பனை உணவுப் பொருட்களின் பாவனை அருகி வந்துள்ளது.

எமது பிரதேசத்தில் ஒரு வருடத்திற்குக் கிடைக்கும் 240, 000 மெட்ரிக் தொன் பனங்களியிலிருந்து 60%மாவது அதாவது 150, 000 மெட்ரிக் தொன் பனங்களியாவது சேகரிக்கப்பட்டால் அவற்றிலிருந்து 45, 000 மெட்ரிக் தொன் பனாட்டும் 25, 000 மெட்ரிக் தொன் ஒடியல் மாவும் பெறப்பட முடியும். ஆனால் குடாநாட்டுமக்களின் உணவுத்தேவை வருடத்திற்கு 60, 000 மெட்ரிக் தொன் அரிசியும் 36, 000 மெட்ரிக் தொன் மாவுமாகும். ஆகவே குடாநாட்டுமக்களின் உணவுத் தேவையில் 3/4 பங்கை பனை வளத்தால் பூர்த்தி செய்ய முடியும். மேலும் பனையிலிருந்து பெறப்படும் உணவுப் பொருட்களாகிய பனாட்டும் ஒடியல்மாவும் இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவுடன் ஒப்பிடுகையில் அதிகளவு சத்துணவாகக் கருதப்படுகிறது. ஆகவே பனை உணவுப் பொருட்களை சரியானவிதத்தில்பயன்படுத்தும் பட்சத்தில் கோதுமைமாவின் தேவை அருகிவிடும்.

இதைவிட கள் வடிப்பதும், கள் நுகர்வதும், எமது சீனி சார்ந்த உற்பத்தித் தேவைகளைப் பாதிப்படையச் செய்வதாகவே உள்ளது. கள்ளுக்குப் பதிலாக கருப்ப நீரை உற்பத்தி செய்தால் அதிலிருந்து சீனி, கல்லாக்காரம், பனங்கட்டி என்பவற்றை உற்பத்தி செய்யலாம். விரயமாகும் கழிவுப் பாணியிலிருந்து தரமான சாராயமும் உற்பத்தி செய்யப்படலாம்.

சரியான ஓர் செயற்திட்டத்தை உருவாக்கி கள்ளுக்குப்பதிலாகக்கருப்பநீரைமுழுமையாக வடிக்கும்போது 50,000 மெட்ரிக் தொன் சீனியையும் சுமார் 50,0000 போத்தல் சாராயத்தையும் தயாரிக்கலாம். ஆனால் குடாநாட்டின் சீனித்தேவை வருடமொன்றுக்கு 24,000 மெட்ரிக் தொன்னாகும். ஆகவே எமது பிரதேசத்தில் இன்று நிலவுகின்ற கடுமையான சீனித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய சிறந்தவழி பனஞ் சீனித் தயாரிப்பேயாகும். ஆகவே கள் வடிப்பதை நிறுத்தி கருப்பநீர் வடிப்பதற்கு சீவல் தொழிலாளர்கள் அனைவரும் முன்வரும் பட்சத்தில் குடாநாட்டுத் தேவையைவிட இரண்டு மடங்கு சீனி உற்பத்தி செய்யப்பட முடியும்.

வடமாகாணத்தில் உற்பத்தியாகும் திராட்சை போன்ற பழவகைகளிலிருந்தும் கழிவுப் பாணி, கள்ளு என்பவற்றிலிருந்தும் தரமான மதுசார வகைகளை உற்பத்தி செய்ய முடியும். இவற்றை தற்போது இயங்கி வரும் வடிசாலைகள் கையாளக்கூடிய திறனைக் கொண்டுள்ளன. இதுதவிர அழகிய, பழுதடைந்த பழவகைகளிலிருந்தும் எரிபொருளுக்கு உகந்த மதுசாரம் தயாரிக்கப்பட முடியும். 2ஆம் உலகமகா யுத்தகாலத்திலும் தற்போது பிறேசில் போன்ற நாடுகளிலும் பெற்றோலுடன் 20% மதுசாரம் கலக்கப்பட்டே வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இது பெற்றோல் வளம் குன்றிய நாடுகளுக்கும் குறைந்த விலையில் மதுசாரம் தயாரிக்கக் கூடிய விவசாய நாடுகளுக்கும் உகந்த ஒரு செயற்திட்டமாகும்.

எமது உடனடிப் பற்றாக் குறையான சீனித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய 1980இல் திட்டமிடல் பகுதியினால் உருவாக்கப்பட்ட 25 பனஞ்சீனித் தொழிற்சாலைகளையும் மறுசீரமைத்து சீனி தயாரிக்கும் பட்சத்தில் சீனித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியும். அதற்குமுன் கள் வடிப்பதை நிறுத்தி கருப்ப நீர் வடிப்பது சீவல் தொழிலாளர்களின் போர்க் காலக் கடமைகளில் ஒன்றாகும். குடாநாட்டு மக்கள் அனைவரும் போராட்ட சூழ்நிலையை உணர்ந்து தமது பங்களிப்பை நல்கும் பட்சத்தில் உணவில் தன்னிறைவு பெறுவது எமக்கு கஷ்டமான காரியமல்ல.

## விடுதலைப்புலிகளுக்கு தெய்வ அருள்

(வசாவிளான்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகளுக்கு தெய்வ அருள் வேண்டி அச்சுவேலி, பத்தமேனி தீர்த்தாங்குளப் பிள்ளையார் கோயிலில் நேற்றுக்காலை தமிழீழ மக்கள் சார்பில் நவோத்திர சங்காபிஷேகம் நடைபெற்றது.

## பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு 62லட்.ரூ. அவுஸ்திரேலியா உதவி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கென அவுஸ்திரேலிய அரசாங்கம் 62 லட்சம் ரூபாய் பணத்தை அளித்திருக்கிறது.

இப்பணத்தில் அரைப் பங்கினைக் கொண்டு மருந்து உபகரணங்களும், மருந்துப் பொருட்களும் கொள்வனவு செய்து அதனை யூனிசெப் ஸ்தாபனம் மூலம் விநியோகிக்கப்படும் என்று அவுஸ்திரேலியா தூதுவர் அறிவித்துள்ளார்.

மீதி அரைப்பங்கு பணமாக அரச சார்பற்ற நிறுவனமாகிய ''கெயார்'' மூலம் வடக்குக் கிழக்கு பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

## வட்டு. இந்துக்கல்லூரியில் தையல் மெசின்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இருந்து இரண்டு தையல் மெசின்கள், பப்ளின் துணிவகைகள், மரவேலை உபகரணங்கள் என்பன களவாடப்பட்டுள்ளன.

இக் களவாடப்பட்ட பொருட்கள் பற்றிய விபரங்கள் தெரிந்தால் அருகிலுள்ள விடுதலைப் புலிகள் முகாமிலோ அல்லது பாடசாலை நிர்வாகத்தினரிடமோ அறிவிக்கும்படி கேட்டுள்ளனர். தையல் இயந்திரங்களின் இலக்கம் (1) சிங்கர் என், எல். ரீ 3252223 (2) சிங்கர் ஐ. எஸ். என். ஏல். 11 டபிள்யூ 8299024. (ம

## மங்கையர்க்கரசியில் ஆலோசனைக் கூட்டம்

## ஐரோப்பிய அதிகாரி தகவல்

# மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட முறைசாராக் கல்விப் பிரிவுகளில் கற்கும் மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சிக்கான வகுப்புக்களை கல்வித் திணைக்களம் ஒழுங்கு செய்துள்ளது.

இப் பாட அலகு பாடத் திட்டத்தில் உள்ளதால் மதிப்பீட்டுக்குள்ளாக்கப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

முதலுதவிப் பயிற்சி வகுப்புக்களுக்கு சகல மாணவர்களையும் போதனா ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இம் மாதத்தில் நடைபெறவிருக்கும் இப் பயிற்சிவகுப்புகள், நல்லூர் சாதனா பாடசாலை, ஸ்ரான்லிக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரிகளில் 18, 19, 20, 21 ஆம் திகதிகளிலும்-

இராமநாதன் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரிகளில் 22, 23, 24, 25 ஆம் திகதிகளிலும்-

மானிப்பாய் இந்துக் கல்லூரி, நெல்லியடி மகளிர் மத்திய மகாவித்தியாலயத்தில் 26,27,28,29 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

தினமும் 9.00 மணி தொடக்கம் 12.00மணிவரை இவ் வகுப்புக்கள் நடைபெறும். மாணவர்களும், போதனா ஆசிரியர்களும் தமக்கு அண்மித்த பயிற்சி நிலையங்களில் சென்று பயிற்சியினைப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3,000 மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு நடாத்தப்படும் முதலுதவிப் பயிற்சியில் மூவாயிரம் மாணவர்கள் முதலுதவிப் பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சி வகுப்புகளில் சமூகசேவைகள் பற்றிய பயிற்சிகளும் அளிக்கப்படும்.

முதலுதவிப் பயிற்சி பெற விரும்பும் முறைசாராக் கல்வி மாணவர்கள் தவிர்ந்த ஏனையோரும் இப்பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அச்சத்தால் பயனில்லை உரிமைக்காக போராடவேண்டும்

-பல்கலைக்கழக மாணவி உரை

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதி யாழ். பல்கலைக்கழக அனைத்து மாணவர்களும் இணைந்து நேற்றுக் முன்தினம் காலை 9 - 30 மணியளவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய முன்றலில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு வதிரி, நாவலடி, வி.எம். ஒழுங்கையூடாகப் பருத்தித்துறை நகரையடைந்து பின்னர் பிரதான வீதியூடாக நெல்லியடி பஸ் நிலையம் சென்று மீண்டும் மத்திய மகாவித்தியாலய முன்றலில் முடிவடைந்தது. ஊர்வலத்தின் முடிவில் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் செல்வி. வேணி உரையாற்றுகையில்;

சிங்களக்காடையர்கள்வந்துவிட்டார்கள், . சிங்கள இராணுவம் வந்துவிட்டது. பெண்களுக்கு ஆபத்துவரும் எனக் கூறி அச்சம்கொள்வதில் அர்த்தமில்லை. இதற்கு மாறாகப் பெண்களும் களத்தில் குதித்து உரிமைகளுக்காக, மானத்தை காப்பதற்காகப்போராடுவதற்குச் சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்துள்ளார்கள் எமது போராளிகள். இதற்காக அனைவரும் ஆயுதம் ஏந்தித்தான் போராட வேண்டுமென்றில்லை. பெண் அடிமை விலங்கை உடைப்பதற்காக, மண்ணை மீட்பதற்காக, மக்களைக் காப்பாற்றுவதற்காக பெண்கள் எல்லோரும் ஒன்றிணைந்து ஏதோ ஒருவழியில் தம்மாலான பங்களிப்பை ஆற்றுவதற்கு முன்வர வேண்டும் எனக் கூறினார்.

மாணவ பிரதிநிதி செல்வன் தாமரைச்செல்வன் உரை ஆற்றுகையில்:

எமது சுய நிர்ணய உரிமைகளைச் சர்வதேச ரீதியில் குரல் கொடுக்க அனைத்து மாணவ சக்திகளும் முன்வர வேண்டும் எனக் கோரினார்.

செல்வன் சிவதாஸ் உரையாற்றுகையில் எமது உரிமைகளை நாம் தான் போராடிப் பெற்றுக்கொள்ளவேண்டும் எனக் கூறினார். எமது மண்ணில் மக்களின் விடிவை நோக்கிய கவிதை ஒன்றினை செல்வன் நெடுஞ்செழியன் வாசித்தார்.

மேற்படி ஊர்வலத்தில் இனப் படுகொலையை கண்டித்தும், பொருளாதாரத் தடையை நீக்கக் கோரியும், அத்துடன் கைதுசெய்யப்பட்ட மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த 50 மாணவர்களின் நிலையினை தெளிவுபடுத்தக் கோரிய சுலோகங்கள் தாங்கிய அட்டைகளை மாணவர்கள் தாங்கிச் சென்றனர். ஊர்வலத்தின் முன் மாட்டுவண்டியில் ஒலிபெருக்கி அமைத்துமேலே தெரிவித்த கோஷங்களை கோஷித்த வண்ணம் மாணவர்கள் சென்றனர்.

## தமிழர்களின் கடைகளில் ராணுவம் கொள்ளை

(வவுனியா)

வவுனியா நகரம் வெறிச்சோடியிருப்பதாகவும், அங்

## தற்போதைய நிலைமையில் உணவு உற்பத்தி மிக அவசியம்

(பண்டத்தரிப்பு)

இன்றைய காலகட்டத்தில் அனைவரும் உணவு உற்பத்

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால், அதன் கிளைக்குழு உறுப்பி

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த உயர்தரப் பரீட்சை ஒத்திவைக்கும் விடயம் தொடர்பாக தமிழ் பேசும் மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று புதன் கிழமை நடைபெறுகின்றது.

இக் கூட்டம் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் காலை 10. 00 மணிக்கு நடை—பெறும். யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச பிரதிநிதிகளையும் சமுகமளிக்கும்படி தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

### காணவில்லை

கதிரவேலு ஐயாத்துரை என்பவர் தனது மனைவியை மூளாய் வைத்தியசாலையில் விட்டு வட்டுக்கோட்டைக்கு சென்ற இடத்தில் காணவில்லை. இவருடைய மனைவி தற்போது ஆபத்தான நிலையில் உள்ளார். இவருடைய தகவலறிந்தவர்கள் கீழுள்ள முகவரிக்கு அறிவிக்கவும்.

வே. இராசையா,
நவாலி தெற்கு
மானிப்பாய்.

[R/ 526

### அறிவித்தல்

கந்தர்மடம் சிற்றூரவையைச் சேர்ந்த தமிழீழ மீட்பு நிதிக்கான கடன்பத்திரம் பெற்றுக் கொள்ளத் தவறியவர்கள் இப்பத்திரத்தைப் பெற்று பூர்த்தி செய்வதுடன், இக்கடன் பத்திரத்தை பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்காதவர்கள் பூர்த்திசெய்து சமர்ப்பிக்கவும். இவ்விரு பகுதியினரும் புதன் கிழமை 18-7-90-ல் 3மணி முதல் 6 மணிவரை கந்தர்மடம் வாசிகசாலையில் சமுகமளிக்கவும்.

**த. ஈ. வி. பு. மக்கள்முன்னணி**

சிற்றூரவை - கந்தர்மடம்

(R.524)

ஐரோப்பிய அதிகாரி தகவல்

## சிறிலங்கா படைக்கும் தமிழருக்குமிடையிலான யுத்தம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவின் இராணுவப் படையினருக்கும் – தமிழ் மக்களுக்கும் இடையிலேயே வடக்கு, கிழக்குப் பகுதிகளில் யுத்தம் நடைபெற்று வருவதாக ஐரோப்பாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்,

திருக்கோணமலைப் பகுதியில் நிவாரணப் பணிகளை இதே அதிகாரி மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா இராணுவத்துக்கும், தமிழ் மக்களுக்கும் இடையிலான இந்த யுத்தம் ஒரு முடிவுக்கு வருவதற்கான சாத்தியக்கூறு தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாக சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பெற்றோர் ஆசிரியர் சங்க சம்மேளன நிர்வாக சபைக் கூட்டம் இன்று 18. 7.90 இல் கல்வித் திணைக்களத்திற்கு அருகாமையிலுள்ள நல்லூர் சாதனா பாடசாலையில் காலை 10. 30மணிக்கு நடைபெறவுள்ளது.

நிர்வாக சபை உறுப்பினர்களை தவறாது சமுகம்அளிக்கும்படி யாழ் கல்வித்திணைக்களம் கேட்டுள்ளது.

(ம)

### அறிவித்தல்

**வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

திருநெல்வேலி - யாழ்ப்பாணம்

**வருடாந்த பொதுக் கூட்டம்**

**25 - 07 - 90**

காலம் :- 25 - 07 - 90 புதன் காலை 10.00 மணி
இடம் :- சமாச புதிய அலுவலகம் திருநெல்வேலி
தலைவர் :- திரு, தி. அமிர்தநாதன் (சமாசத்தலைவர்)

மேற்படி கூட்ட அழைப்பிதழ் சகல சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அழைப்பிதழ் கிடைக்க தாமதம் ஏற்படினும், சங்கம் தமது சமாச பொதுச்சபைப் பிரதிநிதிகளைத் தவறாது சமுகம் கொடுக்க ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள
வ. த. செல்லக்கண்டு
(செயலாளர்)

(B-1270)

(வவுனியா)

வவுனியா நகரம் வெறிச்சோடியிருப்பதாகவும், அங்குள்ள தமிழர்களின் கடைகளை ஸ்ரீலங்கா படையினர் கொள்ளையடித்ததாக முஸ்லிம் வர்த்தகர் கூறியதாக வவுனியா சென்று நிலைமைகளை அவதானித்த பி. பி. ஸி செய்தி அறிவித்தது.

## ஆலோசனைக் கூட்டம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை பத்து மணியளவில், ஆதீன முதல்வர் தலைமையில் நாட்டின் இன்றைய நிலைபற்றி ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் சகல சைவ சமய நிறுவனங்களின் பிரதிநிதிகளும், அன்பர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்

## சின்னக்கடையில் களவு

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்னக்கடையில் அமைந்துள்ளறெஜிபார்மசியில் ஞாயிறன்று இரவு சுமார் ரூபா 75 ஆயிரம் பெறுமதியான ஆங்கில மருந்து வகைகள் களவாடப்பட்டுள்ளன. சந்தேக நபர்களான நான்கு பேர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடை உரிமையாளரான கிறிஸ்துராசா குருநகரிலிருந்து இடம்பெயர்ந்து அகதியாக கௌதாரிமுனையில் இருந்த சமயம் மேற்படி திருட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

## உணவு விநியோகம்

(தீவுப்பகுதி)

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வேலணை மக்களுக்கும், வேலணைப் பிரதேசத்தில் அகதிகளாக வந்த மக்களுக்கும் உணவு விநியோக சேவைகளை செய்து வருகின்றது. (15)

(பண்டத்தரிப்பு)

இன்றைய காலகட்டத்தில் அனைவரும் உணவு உற்பத்தியில் முழுமூச்சுடன் இறங்க வேண்டும்.

இந்த விடயத்தில் கூட்டுறவாளர் அனைவரும் உணவு உற்பத்தியின் அவசியத்தை உணர்த்தி, மக்களை உணவுற்பத்தியில் துரிதமாக இறங்கத் தூண்டவேண்டும்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் மகாதேவா, யுத்த காலத்தில் கூட்டுறவாளர்கள் பங்களிப்பு, என்ற தலைப்பில் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால், அதன் கிளைக்குழு உறுப்பினர்களிடையே உரையாற்றுகையில் கூறினார்.

சங்கத்தலைவர் திரு. கா. கந்தசாமி தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

திரு மகாதேவாதொடர்ந்து உரையாற்றுகையில், வெண்காயம், மிளகாய், புகையிலை செய்கையின் அளவை தற்காலிகமாக குறைத்து உணவுப் பயிர்ச்செய்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றார்.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரஜனனம் | வீரமரணம் |
|---|---|
| 20 | 18 |
| - | - |
| 3 | 7 |
| - | - |
| 1967 | 1989 |



**சிவராசா ரமேஸ்குமார்**
**(அனுஷன்)**

தமிழின விடிவிற்காய்
தரணியிலே உதிர்த்த தனயனே!
மக்களின் விடிவிற்காய் – தமிழ்
மண்ணில் மலர்ந்த மறவனே!
அந்நியர் உன்னுயிரை அழித்தனர்
ஆனால் உன் இலட்சியத்தை
அழிக்கவே முடியாது.

(ஏழாலையில் இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

ஏழாலை
சூறாவத்தை

— நண்பர்கள்

(R. 527)

சிந்தனைக்கு

கயவன் தாங்க வேண்டிய சுமை, கபட வேடம்.

- ஸேம்யல் ஜான்சன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 18-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# போதும் கண்துடைப்பு!

அம்பாறையில் சிறிலங்கா அரசபடைக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்குமிடையில் நடந்த சண்டையைத் தொடர்ந்து அறுநூற்றிஐம்பது அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்கா அரசின் சிங்களப் படையைச் சேர்ந்த ''சுத்தவீரர்களினால்'' படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இது ஒன்றும் அதிர்ச்சி தரக்கூடிய ஆச்சரியமான செய்தியல்ல. கடந்த வாரம் நான்கு தினங்களுக்குள் திருக்கோணமலையில் நிலாவெளியில் மட்டும் பெண்கள் உட்பட ஐம்பத்திஐந்து தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்,

வடக்கிலும் கிழக்கிலும் இப்பொழுது சிறிலங்கா சிங்கள அரசு நடத்திவரும் முப்படைகளின் மும்முனைத் தாக்குதல்களினால் தினமும் தமிழ்ப் பொது மக்களே கொல்லப்படுகின்றனர். இனக்கொலை இலங்கையில் புதியதுமல்ல. புதுமையுமல்ல.

ஆனால் அம்பாறையில் அறுநூற்றிஐம்பது தமிழர்கள் அரசபடையினரால் படுகொலை செய்யப்பட்டனர் என்ற குற்றச்சாட்டு பற்றி விசாரணை நடத்துவதற்கு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இணங்கியிருப்பதாக வெளிவந்த செய்திதான் புதுமையாக இருக்கிறது.

1956 ஆம் ஆண்டில் அடி எடுத்துவைத்த இனக் கலவரமும் இனப்படுகொலையும் இன்னமும் இலங்கையில் ஓயவில்லை. இது இன அழிப்பாகவே இன்று மாறி இருக்கிறது.

1977 ஆம் ஆண்டில் சிறிலங்காவின் காவல் துறையினரால் ஆரம்பிக்கப்பட்ட இனக்கலவரம்பற்றி விசாரணை செய்ய வேண்டுமென்றும் இதற்கென விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டுமென்றும் கோரிக்கை எழுந்தது.

இக் கோரிக்கைக்கு செவிசாய்த்த அன்றைய பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் எம். ஸி. சன்சோனியை ஆணையாளராகக் கொண்ட தனிநபர் விசாரணைக் கமிஷனை நியமித்தார்.

சன்சோனிக் கமிஷன் யாழ்ப்பாணத்திலும் கண்டியிலும் கொழும்பிலும் என்று விசாரணை நடத்தியது. வழக்குத்தொடுநராக இருந்தவரே பின்னர் சாட்சியாகவும் எதிரியாகவும் மாறி எப்படியோ பலமாதங்களின் பின் சன்சோனிக் கமிஷன் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கை இன்றுவரை பொதுமக்கள் கைக்கு எட்டவுமில்லை; சன்சோனிக் கமிஷனின் சிபார்சுகள் இன்றுவரை மக்களுக்குக் கிட்டவுமில்லை.

1981 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் அரசபடைகள் கொள்ளிவைத்து அழித்த ''லங்கா தகனம்'' சம்பந்தமாக நியமிக்கப்பட்ட லயனல் பெர்னான்டோ தலைமையிலான மூவர்குழு மட்டும் தனது கடமையைக் கச்சிதமாக

# போர்க்காலச் சிந்தனைகள்

## ஆயுதப்போராட்டம் ஏன்?——4

ஆயுதமேந்திப் போராடும் பிரபாகரனும் அவர் தோழர்களும் மனநோயாளிகளல்ல.

அவர்கள் இரக்கமே இல்லாத அரக்கர்கள் அல்ல. ஆயுத மூலம் சகலதையும் சாதித்து விடலாம் என்ற மனப்பாங்கு உடையவர்கள் அல்ல.

போர் கொடியது; அழிவை ஏற்படுத்துவது; மனிதனை மிருகமாக்குவது என்பது அவர்களுக்குத் தெரியாதது அல்ல.

வாள் எடுத்தவன் வாளால் மடிவான் என்பது அவர்களுக்குத் தெரியாததல்ல.

சமாதானத்தை நிலை நாட்டுபவர்களே பாக்கியவான்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியாததல்ல.

அப்படியானால் பிரபாகரன் ஆயுதமேந்தியதேன்? ''ஜே. ஆர் ஜெயவர்த்தனா ஓர் உண்மையான ஜனநாயகவாதியாக இருந்திருப்பரேயானால் நான் ஆயுதமேந்தியிருக்க மாட்டேன்''

இது பிரபாகரனின் பதில்.

இப்பதிலை அவர் குறிப்பிட்ட சரித்திரப் பின்னணியுடன் இணைத்துப் பார்த்தால் தான் ஆயுதப்போராட்டம் ஏன் என்பதற்கான விடையைக் காணமுடியும்.

பொய், பித்தலாட்டம், ஏமாற்று, அலட்சியம் அடக்குமுறை, சலுகை - இவைதான் சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு அளித்த அருஞ்செல்வங்கள்.

இந்த நாடு எப்படி ஆளப்பட்டது என்பதையும் தமிழர்கள் காலத்துக்குக் காலம் எவ்வாறு ஏமாற்றப்பட்டார்கள் என்பதையும் சீர் தூக்கிப் பார்த்த பின்னர்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தினார்கள்.

இலங்கைத் தமிழ் மக்களின்

இந்த நிலையில் ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறெந்தவிதமான முறையும் இல்லை என்பதனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தினார்கள்.

சிங்களவனுக்கு அடியைத் தவிர வேறெந்த மொழியும் விளங்காது என்பதை நன்கு அறிந்து கொண்டதன் பின்னரே தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தினார்கள்.

வரலாற்றுப் போக்கை மாற்றி அமைக்கும் காலம் வந்து விட்டது என்பதை உணர்ந்துதான் இளைஞர்கள் ஆயுதமேந்தினார்கள்.

இன்று அந்த இளைஞர்கள் பேரினவாத சிங்கள அரசபடையை எதிர்த்து வீரப் போர் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இனிமேலும் ஆயுதப்போர் ஏன்? எனக் கேட்கலாமா?

நாங்கள்சிறுபான்மையினர். ஆட்சியில் இல்லாதவர்கள்; சலுகைகளைப் பெறுவதற்கே அல்லாது உரிமைகளுக்கு இலாயக்கற்றவர்கள் என நினைக்கலாமா?

சிங்களவனிடம் அடிமைப் படவும் அவனால் ஆளப்படவும் வேண்டுமென்பதே எமது தவிர்க்க முடியாத தலைவிதி என எண்ணலாமா?

பெரும்பான்மையினருடன் ஆயுதம் ஏந்திப் போரிட முடியாது; அப்படிச் செய்தால் அழிந்து போவோம் என பயப்படலாமா?

சிங்களவருடன் ஒத்துப் போவதும் அவர்களுக்குச் சேவை புரிவதும் அவரால் பாராட்டப்படுவதுமே வாழும் வழி எனக் கொள்ளலாமா?

சிந்தித்துப் பாருங்கள்.

இன விடுதலை என்பது வெறும் தேர்தல்காலக் கோஷமல்ல; அது விடிவுத் தத்துவம்; அது நடைமுறையில் செயற்படுத்தப்பட வேண்டிய மேன்மையான சித்தாந்தம்; அது சொல்அல்ல செயல்; செயல் மூலமே விடுதலையைப் பெறலாம்.

இப்போரில் நாம் வெற்றி பெற்றேயாக வேண்டும் அல்லது ''தாழ்வுற்று விடுதலை கெட்டு பாழ்பட்டு'' அழிந்து போவோம். நாம் வெற்றி பெறுவோம் என திடசங்கற்பம் பூணுவோம்.


''ஒன்றுபட்டாலுண்டுவாழ்வே -நம்மில்
ஒற்றுமை நீங்கிலனைவர்க்கும் தாழ்வே!
நன்றிதுதேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற் பின் நமக்கேது வேண்டும்!

(தொடரும்)

இரத்தினம்

# கேட்டதைவிட வழங்கியது அதிகம்;

# ஐரிஸ் மக்களின் விடுதலை உணர்வு



மைக்கேல் கொலின்ஸ்

முன்னர் எடுத்த தீர்மானத்தின்படி 1918 ல் பிரிட்டிஷ் அரசு நடாத்திய பாராளுமன்றத் தேர்தலில் பங்கேற்று வெற்றிபெற்ற அயர்லாந்தின் சின்பீன் கட்சியினர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்குச் செல்லாது மான்ஷன் மாளிகையில் டெயில் ஐரான் என்னும் பெயரில் புதிய குடியரசு

சுக்குத்தேவையான பணத்தை மக்களிடமிருந்து டெயில் ஐரான் பெயரால் கடனாகப் பெற முடிவு செய்து - உள்நாட்டில் 2,50,000 பவுணும் வெளிநாடுகளில் உள்ள ஐரிஷ் மக்களிடம் 2,50,000 பவுணும் கடனாகத் திரட்டுவதெனவும் இந்த கடன் நிதித் திட்டத்திற்கு மக்களால் கொடுக்கப்படும் பணத்துக்கு ஈடான

அவர்கள், மைக்கேல் கொலின்சின், உத்தரவின் பேரில் தங்களுக்கு வேண்டிய உதவியாட்களை நியமித்துக்கொண்டு கடன் நிதி திரட்டும் வேலையில் இறங்கினர். சிறைக்குள் சிக்காது வெளியில் இருந்த டெயில் ஐரான் உறுப்பினர்களும் தத்தம் பகுதி நிதி திரட்டலுக்குப் பொறுப்பாக இருக்க ஏற்பாடு செய்யப்பட்

**ஐரிஸ் விடுதலைக்காகப் போராடிய சின்பீன் இயக்கத்தைச் சேர்ந்த டி'வேலரா மைக்கேல் கொலின்ஸ் ஆகியோர் ஐரிஸ் மக்களிடம் 2,50,000 பவுண் நிதியை கடனாக வேண்டி கோரிக்கை விடுத்தனர்: அவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாக 3,75,000 பவுண் நிதியை பிரிட்டிஷ் ஆட்சியாளரின் அடக்குமுறைகளுக்கிடையே ஐரிஸ் மக்கள் வாரி வழங்கினர்.**

கடன் பத்திரங்களைக் கொடுத்து நாடு சுதந்திரம் அடைந்தபின் வட்டியுடன் முதலைத் திருப்பிச் செலுத்துவதாக உறுதி கூறி துண்டுப் பிரசுரங்கள் மூலம் பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

டது. சின்பீன் கட்சியினரிடம் மாத்திரமன்றி பொதுமக்களிடமும் இருந்தும் கடன் நிதி திரட்டப்பட்டது.

பிரிட்டிஷ் படையினரின் தீவிர வேட்டைக்கு நடுவே நிதி திரட்டலுக்கான கடன்



ஈமன் டி'வேலரா

தற்கு என இரகசிய அறைகள் அமைக்கப்பட்டன.

தேசியக்கடன் நிதியைப் பற்றி செய்திப்பத்திரிகைகள் மிகப் பெரிய அளவில் விளம்பரப் படுத்தியிருந்தன. பிரிட்டிஷ் அரசின் நெருக்குதலின்றும் தப்புவதற்காக டெயில் ஐரானின் நிதி திரட்

திரட்டப்படும் கடன் நிதி பயன்படுத்தப்படும் என்று டெயில் ஐரான் அறிவித்திருந்தது.

பிரிட்டிஷ் அரசோ அந்த நிதிக்கு உதவுவது சட்ட விரோதமானது என்று அறிவித்ததுடன் அது பற்றி செய்தி வெளியிட்ட பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டும் போட்டது. சில பத்திரிகை அலுவலகங்களும் அச்சுயந்திரங்களும் உடைக்கப்பட்டன. இவ்வாறு பல பத்திரிகைகள் ஏககாலத்தில் அடக்கப்பட்டுப் போனதால் அதுவே கடன் நிதித் திட்டத்துக்கு விசேட விளம்பரமாகி விட்டது. இதனால் இத்திட்டத்துக்கு மக்கள் ஆதரவு பெருகியது. டெயில் ஐரானின் நிதி வசூல் எதிர் பார்த்த இலக்கையும் தாண்டி விட்டது. 1920 ஜூலையில் நிதி திரட்டலை நிறுத்திய போது உள்நாட்டு மக்களிடமிருந்து 3,75,000 பவுண் நிதி சேர்ந்திருந்தது. இது எதிர் பார்த்த இலக்கை விட 1,25,000 பவுண் அதிகமாகும்.

மக்கள் மத்தியில் நிதி திரட்டலுக்கான கூட்டங்கள் பிரிட்டிஷ் அரசின் அடக்கு முறை காரணமாக அனேகமாக கிராமங்களின் ஒதுக்குப் புறங்களிலேயே நடத்தப்பட்டன. பல இடங்களில் இடுகாடுகளில் கூட நிதிதிரட்டும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இத்தகைய கெடு பிடிகளுக்கு

வழக்குத்தொடுநராக இருந்தவரே பின்னர் சாட்சியாகவும் எதிரியாகவும் மாறி எப்படியோ பலமாதங்களின் பின் சன்சோனிக் கமிஷன் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கை இன்றுவரை பொதுமக்கள் கைக்கு எட்டவுமில்லை; சன்சோனிக் கமிஷனின் சிபார்சுகள் இன்றுவரை மக்களுக்குக் கிட்டவுமில்லை.

1981 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் அரசபடைகள் கொள்ளிவைத்து அழித்த ''லங்கா தகனம்'' சம்பந்தமாக நியமிக்கப்பட்ட லயனல் பெர்னான்டோ தலைமையிலான மூவர்குழு மட்டும் தனது கடமையைக் கச்சிதமாக முடித்துச் செய்திருந்த சிபார்சுகள் மட்டும் பெரும்பகுதி நிறைவேற்றப்பட்டன. ஆனால் யாழ்ப்பாணம் பொது நூல்நிலையத்துக்கு நஷ்டஈடாக வழங்கவேண்டுமென்று செய்யப்பட்ட சிபார்சு மட்டும் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை.

யாழ். போதனா வைத்தியசாலை கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல்களினால் பாதிக்கப்படுகிறதென்ற பெரும் குற்றச்சாட்டுபற்றி ஓய்வுபெற்ற நீதியரசர் எ. ஸி. அலஸ் தலைமையிலான தனி நபர் விசாரணை ஆணைக்குழு எதிர்மாறான அறிக்கையைச் சமர்ப்பித்தது.

1985 ஆம் ஆண்டில் சிறிலங்கா அரச படைகள் கல்முனைப்பகுதியில் தமிழ் இளைஞர்களைக் கொண்டே குழிவெட்டி அதே இளைஞர்களை அதே குழிக்குள் போட்டு சமாதிவைத்த கொடூரம் பற்றி கல்முனைப் பிரஜைகள் குழுவைச் சேர்ந்த கனடியப் பிரஜையான போல் திலகநாயகம் வெளியே தகவல் வெளியிட்டதைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார். நீதிமன்றத்தில் மனுதாக்கல்செய்து நடந்த விசாரணையில் விடுதலையாகி கனடா சென்றார்.

உடும்பன்குளத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த கூலியாட்கள் பலரை அரசபடை படுகொலை செய்து விட்டு புலிகள் மீதுபழிபோட்டது. இது பற்றி விசாரணை தேவையென்ற குரலுக்கு முப்படை அதிகாரிகள் குழு விசாரணை செய்தது.

அரசபடைகளின் அட்டூழியம் பற்றிய புகாருக்கு ''கண்காணிப்புக்குழு'' நியமிக்கப்பட்டு கண்துடைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ். நகரில் நடந்த நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சிப் படுகொலைகள் பற்றி விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்று யு. என். பி. உட்பட எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் கோரியும் கமிஷன் நியமிக்கப்படவில்லை.

பொதுமக்கள் சார்பில் ஓய்வுபெற்ற நீதியரசர் டி. கிறெட்சர் ஆணைக்குழு விசாரணை செய்து சமர்ப்பித்த அறிக்கை குப்பைக்கூடைக்குள் வீசப்பட்டது.

இங்கு இனப்பிரச்சினை சம்பந்தமான விசாரணைக் குழுக்களும் ஆணைக்குழுக்களும் சிபார்சுகளும் வெறும் கண்துடைப்பு.

இனக்கொலைகளை நிறுத்தாமல் கொலைகளைப் பற்றி விசாரணை செய்வதில் என்னபயன், இது யாரை ஏமாற்றுவதற்கு?

சில வருடங்களுக்கு முன் மலேஷியாவில் இனக்கலவரம் ஏற்பட்டது. மூன்றே நாட்களில் அதைக் கட்டுப்படுத்தி அதுபற்றிவிசாரிக்க ஆணைக்குழுவொன்று நியமிக்கப் பட்டது. ஒரு மாதத்தில் ஆணைக்குழு அறிக்கையைச் சமர்ப்பித்தது. சிபார்சுகள் செய்தது.

அதன்பின் மலேஷியாவில் இனக்கலகமே ஏற்பட்டதில்லை! இலங்கையில்...?

மைக்கேல் கொலின்ஸ்

முன்னர் எடுத்த தீர்மானத்தின்படி 1918 ல் பிரிட்டிஷ் அரசு நடாத்திய பாராளுமன்றத் தேர்தலில் பங்கேற்று வெற்றிபெற்ற அயர்லாந்தின் சின்பீன் கட்சியினர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்குச் செல்லாது மான்ஷன் மாளிகையில் டெயில் ஐரான் என்னும் பெயரில் புதிய குடியரசு சட்ட சபையை அமைத்து அரசை நிறுவினர். பெயரளவில் பிரிட்டிஷ் அரசு இருந்த போதிலும் ஐரிஷ் மக்கள் டெயில் ஐரானையே தங்களது உண்மையான அரசாகக் கருதி ஒத்துழைத்து வந்தனர்.

டெயில் ஐரானின் தலைவர் டி'வேலரா தமது அர

ஆட்சியாளரின் அடக்குமுறைகளுக்கிடையே ஐரிஸ் மக்கள் வாரி வழங்கினர்.

கடன் பத்திரங்களைக் கொடுத்து நாடு சுதந்திரம் அடைந்தபின் வட்டியுடன் முதலைத் திருப்பிச் செலுத்துவதாக உறுதி கூறி துண்டுப் பிரசுரங்கள் மூலம் பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

டெயில் ஐரானின் வரவு செலவு அமைச்சராக இருந்த மைக்கேல் கொலின்ஸ் நிதி வசூல் வேலையைப் பொறுப்பெடுத்து தீவிரமாகச் செயலில் இறங்கினார். நாட்டின் பல பாகங்களிலும் கட்டுப்பாடாக ஊழலற்ற ஒழுங்கு முறையில் நிதியைத் திரட்டுவதற்கு பொறுப்பு வாய்ந்த நால்வர் நியமிக்கப்பட்டனர்.

டது. சின்பீன் கட்சியினரிடம் மாத்திரமன்றி பொதுமக்களிடமும் இருந்தும் கடன் நிதி திரட்டப்பட்டது.

பிரிட்டிஷ் படையினரின் தீவிர வேட்டைக்கு நடுவே நிதி திரட்டலுக்கான கடன் பத்திரங்களையும், விளம்பர துண்டுப் பிரசுரங்களையும் அச்சிடுவதிலும், திரட்டும் நிதிக் கணக்குகளைப் பேணி வைத்திருப்பதிலும் இருந்த சிரமங்களுக்கு மத்தியில் நிதி திரட்டும் வேலை மும்முரமாக நடைபெற்றது. நிதி திரட்டல் தொடர்பான விபரங்களை, கடன் பத்திரங்கள் முதலியவற்றை மறைத்து வைப்ப

ஈமன் டி'வேலரா

தற்கு என இரகசிய அறைகள் அமைக்கப்பட்டன.

தேசியக்கடன் நிதியைப் பற்றி செய்திப்பத்திரிகைகள் மிகப் பெரிய அளவில் விளம்பரப் படுத்தியிருந்தன. பிரிட்டிஷ் அரசின் நெருக்குதலினின்றும் தப்புவதற்காக டெயில் ஐரானின் நிதி திரட்டல் என்று குறிப்பிடாது தேசியப் பிரதிநிதிகள் நிதி திரட்டுகின்றார்கள் என்றே சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

எதிரியிடமிருந்து ஐரிஸ் மக்களுக்கான பாதுகாப்பு, தேசிய புனர்நிர்மாணம், வர்த்தக விருத்தி, கைத்தொழில் விவசாய ஊக்குவிப்பு என்பவற்றுக்கே மக்களிடமிருந்து

டலுக்கான கூட்டங்கள் பிரிட்டிஷ் அரசின் அடக்கு முறை காரணமாக அனேகமாக கிராமங்களின் ஒதுக்குப் புறங்களிலேயே நடத்தப்பட்டன. பல இடங்களில் இடுகாடுகளில் கூட நிதிதிரட்டும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இத்தகைய கெடு பிடிகளுக்கு மத்தியிலும் டெயில் ஐரான் எதிர் பார்த்ததை விட அதிகமான நிதியை ஐரிஸ் மக்கள் மனமுவந்து வாரி வழங்கியதுடன் ஐரிஸ் விடுதலைக்கு தம்மாலியன்ற அனைத்து ஒத்துழைப்புக்களையும் சின்பீன் இயக்கத்துக்கு வழங்கி வந்தனர்.

## இந்தியாவுடன் மோதலை நடாத்த விரும்பவில்லை

**- பெனாசீர் பூட்டோ**

(பஹ்ரெயின்)

காஷ்மீர் பிரச்சினை காரணமாக இந்தியாவுடன் பாகிஸ்தான் இராணுவ மோதலை நடாத்த விரும்பவில்லைஎன்று பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசீர் பூட்டோ இங்கு தெரிவித்துள்ளார்.

அரபு நாடுகளுக்கு வந்துள்ள அவர் பஹ்ரெயின் பிரதமர் அல் ஹவீபாவுடன் பேச்சு நடத்தினார்.

ஈராக், குவைத், மொரிராக்கோ, அல்ஜீரியா, பஹ்ரெயின் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் பிரதமர் காஷ்மீர் பிரச்சினையில் தமக்கு ஆதரவு தருமாறு அதன் தலைவர்களைக் கேட்டார்.

இந்த நாடுகள் பேச்சுவார்த்தைகள் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறு தெரிவித்துள்ளன.

ஜனதாதள் அரசியற் குழு

## கூட்டத்தில் தேவிலால் கலந்து கொள்ளவில்லை

(டில்லி)

பிரதமர் பதவியிலிருந்து விலகப் போவதாக இந்தியப் பிரதமர் வி.பி.சிங் தெரிவித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் தளர்ந்து வருகின்றன.

நேற்று முன் தினம் நடைபெற்ற ஜனதாதள் அரசியல் குழுக்கூட்டத்தின் பின் பத்திரிகையாளர் மத்தியில் கட்சியின் தலைவர் பொம்மை கருத்துத் தெரிவிக்கையில், ஐந்து கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஒரு தீர்வை நெருங்கியுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால் இப்பிரச்சினைக்கு விரைவில் ஒரு தீர்வு காண்பதற்குபிரதம மந்திரி வி.பி.சிங் அவர்களால் காலக்கெடுஒன்றும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் எஸ். ஆர் பொம்மை தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம்இரவுநடைபெற்றஅரசியல் குழுக் கூட்டத்தில் உதவிப் பிரதமமந்திரி தேவிலால் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களைப் பத்திரிகைகளுக்கு மந்திரிகள் எம். பிக்கள் எம். எல். ஏக்கள் தெரியப்படுத்தும் பட்சத்தில் அவர்கள் மேல் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொம்மை எச்சரித்துள்ளார்.

# ஹரியானா முதல்வர் சௌதாலா பதவியில் இருந்து ராஜினாமா

(புதுடில்லி)

ஹரியானா முதலமைச்சர் ஓம்பிரகாஷ் சௌதாலா எதுவித நிபந்தனையுமின்றி பதவி விலகிவிட்டார் என்று ஜனதாதள் கட்சி தலைவர் எஸ். ஆர். பொம்மை தெரிவித்துள்ளார்.

தேசிய முன்னணி அரசின் நலன் கருதியும் கட்சியின் நலன் கருதியும் தான் கேட்டதற்கு இணங்க அவர் பதவி விலகியதாகவும் அவர் சொன்னார்.

எதுவித நிபந்தனையுமின்றி திரு. சௌதாலா பதவி விலகியிருப்பதை தேசிய முன்னணி வட்டாரங்கள் பாராட்டியுள்ளன.

இதேசமயம் திரு சௌதாலா கட்சியின் பொதுச் செயலாளராக பதவி வகிப்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரசியல் விவகார குழுக்கூட்டத்தில் திரு. சௌதாலாவின் தந்தையும், துணைப் பிரதமருமான தேவிலால் கலந்து கொள்ளவில்லை.

தனது மகனின் பதவி விலகலை தாம் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் திரு. தேவிலால் கூறியுள்ளார்.

## இன்று பேச்சுவார்த்தை

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் தோன்றியுள்ள காஷ்மீர் விவகாரம் குறித்து இரு நாடுகளின் வெளியுறவு செயலாளர்கள் இன்று பாகிஸ்தானில் சந்தித்துப்பேசவுள்ளனர்.

இப்பிராந்தியத்தில் பதற்றத்தை தணிக்க இந்தப்பேச்சுவார்த்தைகள் அமைகிறது என இரு நாடுகளும் தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில்

## வேறுபாடுகளை மறந்து செயற்பட வேண்டும்

(சென்னை)

''இலங்கைத் தமிழர் குறித்த விவகாரத்தில் அனைத்துக்கட்சிகளும் தமது வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து செயல்பட முன்வர வேண்டும்'' என்று தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு சிக்கலான நிலைமையை அடைந்திருக்கும் இக்காலகட்டத்தில் மாநிலம் தழுவிய அனைத்துக் கட்சிகளின் இந்த ஐக்கிய செயற்பாடு மிகவும் அவசியமானதாக உள்ள தென்றும் தெரிவித்தார்.

## பூமியதிர்ச்சி: 100 பேர் மரணம்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியால் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மரணமாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இடிபாடுகளை அகற்றி சடலங்களை மீட்கும் வேலைகளை படையினரும் தொண்டர்களும் மேற்கொண்டுள்ளனர்.

Registeredas News Paper at the G. P. O.

# ஈழநாதம்

# இருளில் மூழ்கிய யாழ் குடாநாட்டில் மருத்துவமனைகள், அகதிமுகாம்கள் அவதி!

## தொற்றுநோய் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

மின்சாரமின்மையால் வைத்திய சாலைகளிலுள்ள நோயாளர்களும், அகதி முகாம்களிலுள்ள அகதிகளும் பெரும் அவஸ்தைப் படுகின்றனர்.

தாக்குதலாலும், நோய்களினாலும் வைத்தியசாலைகளில் நோயாளர்கள் அதிகரித்துள்ள இவ்வேளையில் வைத்தியசாலைகள் மின்சாரமில்லாததினாலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் இருளில் மூழ்கியுள்ளதுடன் தண்ணீர் வசதிகளும் இல்லாததினால் நோயாளர்கள் பல சிரமங்களை அனுபவிப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. மேலும் வைத்தியசாலையிலுள்ள ஆய்வுகருவிகளையும் இயக்க முடியா சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திற்கு மின்சாரத்தை வழங்கிவந்த பிரதான மின்கம்பி ஒன்று கிளிநொச்சிப்பகுதியில் ஏற்பட்ட குண்டு வீச்சினால் அறுந்துள்ளமையாலேயே நேற்று முன்தினத்தில் இருந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளமைக்கு காரணம் என தெரிய வந்துள்ளது.

முன்பெல்லாம் இவ்வாறான மின்சார கோளாறுகள் ஏற்படும் பொழுது சுன்னாகம் மின் நிலையத்தில் இருந்து சகல பகுதிகளுக்கும் சுழற்சி முறையில் குறித்த சில மணி நேரத்திற்கு வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமா இம்முறையில் கூட மின்சாரம் பெறுவது சாத்தியமாகாது எனத் தெரிகின்றது.

## சுன்னாகம் தபாலகத்தில் கடிதங்கள் ஏற்கப்படும்

(சுன்னாகம்)

சுன்னாகம் தபாலகத்தில் தற்பொழுது கொழும்பு உட்படப் பிறமாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்குமான தபால்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. தபால்களைத் தினமும் காலை பத்து மணிக்கு முன்னதாகதபாலகத்தில்சேர்த்தால் அன்றைக்கே கட்டும் தபாலில் சேர்க்கக் கூடியதாக இருக்கும் எனச் சுன்னாகம் தபாலதிபர் இ திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார். தபாலுக்குத்தேவையான முத்திரைகளுக்கும் தபாலகத்தில் தட்டுப்பாடில்லை.

யாழ்ப்பாணத்துக்குத்தபால் அனுப்பப்பட்டு, வசதி ஏற்படும் போது கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும்.

## யாழ்நகரில் மீளவும் குழாய் நீர்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரில் மீளவும் குடிநீர் விநியோகம் ஆரம்பிககப்படவுள்ளது. மாநகரசபை எல்லைக்குள் குடிநீர் வழங்கும் குழாய்கள் குண்டு வீச்சினால் சில இடங்களில் தகர்ந்ததால் குடிநீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது. இப்பொழுது திருத்த வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. சப்பிள் வீதியில் ஒழுக்கொன்று திருத்தியமைக்கப்பட்டதும், அடுத்த வாரம் முதல் குடிநீர் விநியோகம் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று யாழ் மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் மின்சாரம் தடைப்பட்டுள்ளதால் மின்சாரம் யாழ்ப்பாணப் பகுதிக்கு வழங்கப்பட்டதும் இந் நீர் வழங்கல் பரீட்சித்துப் பார்க்கப்படும் என கஷ்டமான இவ் வேளையிலும் தமது கடமையை குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று சரிவர நிறைவேற்றிய பொறியியலாளர்களும் சம்பந்தப்பட்ட ஊழியர்களும் தெரிவித்துள்ளனர்.

## செங்கைஅண்ணாமாவட்டத்தில் 950 இலங்கைத் தமிழ் அகதிகள்

(சென்னை)

இலங்கையில் இருந்து வந்த தமிழ் அகதிகளில் தொளாயிரத்து ஐம்பதுபேர் செங்கை அண்ணா மாவட்டத்தில் குடியமர்த்தப்படுவார்கள்.

இங்குள்ள புயல் பாதுகாப்பு நிலையங்களில் இந்த அகதிகளைத் தங்கவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மண்டபம் முகாமிலிருந்து இவர்கள் நேற்று இங்கு கொண்டுவரப்படவிருந்தனர்.

இதேசமயம் நேற்றும் படகுகளில் தமிழ் அகதிகள் இங்கு வந்துகொண்டிருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ்.அரச அதிபரின் செயலகம் சேதம்

யாழ்: அரசாங்க செயலகத்தில் அமைந்துள்ள அரசாங்க அதிபரின் அலுவலகம் குண்டு வீச்சினால் சேதமடைந் துள்ளது. கடந்த சனிக்கிழமை செயலக கட்டிடத்துக்கு முன்பாக விழுந்து வெடித்து 5 பேரின் உயிரை பலிகொண்ட குண்டினால் அரச அதிபரின் அலுவலக யன்னல்கள், மின் விளக்குகள், விசிறிகள், குளிரூட்டிகள் ஆகியன உடைந்து நொருங்கி உள்ளன. செயலகக் கட்டிடத்திலும் பரவலாகசேதங்கள் ஏற்பட்டுள்ளன

சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மேல் இச் சம்பவம் நடைபெற்ற போது அரச அதிபர் அலுவலகத்தில் இல்லாததால் அவர் காயம் எதுவுமின்றித் தப்பிக் கொண்டார். அலுவலக உபகரணங்கள் உட்பட 10 லட்சம் ரூபாவுக்கு மேல் சேதமேற்பட்டிருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது

## பயணிகள் இறங்கும் நேரம் கடற்படையினர் சுட்டனர்

(நயினாதீவு)

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நெடுந்தீவுக்கான உணவுப் பொருட்களை ஏற்றி வர நெடுந்தீவிலிருந்து புறப்பட்ட மோட்டார் படகு கடற்படைப் படகிலிருந்தோரின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்கானதுடன் நெடுந்தீவுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.

அது நெடுந்தீவுத் துறைமுகத்தை அண்மித்த வேளையில் மீண்டும் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானது. அதிற் பிரயாணம் செய்த பிரயாணிகள் அச்சமும் திகிலும் கொண்டு கூக்குரலிட்டனர். கடற்படையினரின் துப்பாக்கிச் சூடுகள் துறைமுகத்தில் நிறுத்தப்பட்ட சைக்கிள்களைச் சேதமாக்கியதுடன் சிலருக்குச் சிறு காயங்களையும் ஏற்படுத்தியது.

பதினைந்து நிமிடங்கள் வரை தொடர்ந்தும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த கடற்படையினர் அங்கிருந்து விலகிச் சென்ற பின்னரே பிரயாணிகள் படகிலிருந்து இறங்கினர்.

கடற்படைப் படகினர் கொந்தளிக்கும் கடல் நடுவில் பல மணி நேரம் பிரயாணிகளின் படகுகளைச் சோதனை என்ற பெயரில் பயங்கர ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தியும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தும் மக்களைத் தாக்கியும் வருவதால், அச்சம் கொண்ட மக்கள் பிரயாணம் செய்ய அஞ்சுகின்றனர்.

## இன்று

தற்போதுள்ள நிலை பற்றி மாணவர்களுடன் கலந்துரையாட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி கூட்டம் இன்று காலை 9-30 மணியளவில் (18-7-90) இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளதால் அனைத்து மாணவர்களும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றார்கள்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜக் கூட்டம் இன்று புதன்கிழமை யாழ். கல்வித்திணைக்கள வளவில் உள்ள சாதனா பாடசாலைக் கட்டிடத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பாடசாலைகளின் இன்றைய நிலைபற்றி கலந்துரையாடப்படவுள்ளது.

செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்கப்படுகின்றனர். (12)

## இளைஞர் கழகம்

### குண்டுவீச்சால்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் விமானத்திலிருந்து குண்டு வீசப்பட்டதால் சின்னத்தம்பி அம்பலவாணரின் வீடு பலத்த சேதத்திற்குள்ளானது.

இதுதவிர கிளிநொச்சி புகையிரத நிலையம், தபால் கந்தோர் ஆகியனவும் பலத்த சேதத்திற்குள்ளாகின. (49)

### காலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டுவானில் தினமும் பொம்மர் தாக்குதல் இடம் பெறுவதால் பீதியடைந்து கிளிநொச்சிக்கு வந்துகொண்டிருந்தபோது கொக்காவில் இராணுவ முகாமைச் சுற்றியுள்ள இடங்களில் விமானங்

## தமிழ்ப் பகுதி நிகழ்ச்சிகள் இல்லை

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள் இம்மாதம் 20ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 1ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. ஆனால் வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள பிராந்திய நிலையங்களில் இவை நடைபெறமாட்டாது.

### அம்பாறை . . .

(1ஆம் பக்கத் தெடர்ச்சி)

லங்கா இராணுவ அதிகாரி கொல்லப்பட்டதாகஸ்ரீலங்கா

## முகாமிற்கு வெளியில் துப்பாக்கி ரவைப் பார்சல்கள்

## அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்தவாரம் வல்வைக் கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படைக்கப்பல் மீதான தாக்குதலின்போது வீர மரணம் அடைந்த கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் விநோத் ஆகியோருக்கான அஞ்சலிக் கூட்டமொன்று நல்லூர் திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் நடைபெறும்.

இன்று புதன்கிழமை காலை பத்து மணியளவில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு திரு ஆ. மு. இராஜகோபால் தலைமை வகிப்பார்

### விமானக் குண்டு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

இச்சம்பவத்தினால் காயமடைந்தவர்களின் விபரம்வருமாறு:

த. சபேந்திரராசா (15) மகுழடித்தீவு, க. பிள்ளையம்மாள் (35) மகுழடித்தீவு, க. புவனசிங்கம்(35) முனைக்காடு, பெ. செல்வம் (46) கிரான்குளம், சி. கணேசபதி (35) கொக்கட்டிச்சோலை, வீ. பரஞ்சோதி (30) கொக்கட்டிச்சோலை, அ.இன்பநாயகி(19) கொக்கட்டிச்சோலை, வ தர்மலிங்கம் (35) முனைக்காடு, ச. அருளானந்தம் (39) தாளங்குடா, க. மலர் (25) கொக்கட்டிச்சோலை என்பவர்களாவர்.

### இராணுவம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகாமை விட்டு வெளியேறி வந்தனர். அச் சமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர். இராணுவம் பார்சல்களை எடுக்காமல் பின்வாங்கி விட்டது.

## பெண்கள் பதுங்கு குழி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

பாசையூர் சந்தைக்கு அருகாமையில் பொதுப்பதுங்கு குழி வெட்டும் வேலையில் அப்பகுதிப்பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

சந்தைக்கு வரும் பொது மக்களுக்குப்பாதுகாப்பிற்காக அப்பகுதிப்பெண்கள் எல்லோரும் ஒன்றுகூடி இப்பொதுப் பதுங்கு குழியை வெட்டி வருகின்றனர்.

### மூன்று தமிழ்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர்.

கறுவல்தம்பி(சவளக்கடை), ஆனந்தன்(சவளக்கடை), புஸ்பராஜா(நாவிலன்வெளி) ஆகிய மூவருமே இவ்வாறு கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்கள் வயலுக்குச் சென்றுகொண்டிருந்தபோது வழிமறித்த ஜிகாத் இயக்கத்தினர் தமிழர்கள்என அடையாளம்கண்டதும் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

## ஜிம்பிறவுணுக்கு இறுதி அஞ்சலி



செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்கப்படுகின்றனர். (12)

## இளைஞர் கழகம் உதவி

(பண்டத்தரிப்பு)

முல்லைத்தீவில் தங்கியுள்ள திருக்கோணமலை அகதிகளுக்கு வடலியடைப்பு இளைஞர் கழகம் ஆயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளன.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இவை அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

சர்வோதய பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கும், சர்வோதய கிராமோதய கிராம அமைப்பாளர்களுக்கும் பயிற்சிக் கருத்தரங்கு யோகர் சுவாமிகள் மகளிர் ஆச்சிரமத்தில் சிறப்பாக நடைபெற்றது. புங்குடுதீவு சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

பொம்மர் தாக்குதல் இடம் பெறுவதால் பீதியடைந்து கிளிநொச்சிக்கு வந்துகொண்டிருந்தபோது கொக்காவில் இராணுவ முகாமைச் சுற்றியுள்ள இடங்களில் விமானங்கள் குண்டுமாரி பொழிந்தனவாம்.

இதனால் பீதியடைந்த அவ் இளைஞன் மேற்படி இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள பதுங்குகுழியில் குதித்தபோதே மிதிவெடியில் அகப்பட்டுக் காலை இழந்தாராம். (49)

### கிளிநொச்சி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதாகவும் தெரியவருகிறது.

மாலை 3 மணியிலிருந்து 7மணிவரை 3 குண்டுவீச்சு விமானங்களும், ஹெலிகொப்டர் ஒன்றும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டன. அதைத்தொடர்ந்து குண்டுகள் போடப்பட்டன. இக் குண்டு வீச்சினால் பல கட்டடங்கள் சேதமாகின. கருணாநிலைய அனாதைப் பெண்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டதால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. (49)


வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு

## நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

74/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது நிலவும் நாட்டின் நிலைமை காரணமாக தினசரி காலை 9 . 00 மணி தொடக்கம் பிற்பகல் 1 . 00 மணிவரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

இங்ஙனம்
நியூ லலிதா ஸ்தாபனத்தார்

(B 1258)


பெறமாட்டாது.

### அம்பாறை . . .

(1ஆம் பக்கத் தெடர்ச்சி)

லங்கா இராணுவ அதிகாரி கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு ஒப்புக்கொண்டாலும் இராணுவத்துக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டதாக இராணுவ வட்டாரங்களிலிருந்து அறியப்படுகின்றது.

அதேவேளை கிழக்கில் விடுதலைப் புலிகளைப் பெருமளவில் ஒடுக்கி விட்டதாக நேற்று முன்தினம் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கைப்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கா, பிரதி அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த அநுரா பண்டாரநாயகா, தர்மஸ்ரீ சேனநாயகா மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தனா, ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் எம்.பி. எம்.எஸ் இஸ்புல்லா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இந்திய வெளியுறவுச் செயலர் துபேயை இத் தூதுக் குழுவுடன் ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் வெளியுறவுச் செயலர் பிராட்மன் வீரக்கோனும் புதுடில்லியில் இலங்கைத் தூதுவராக இருக்கும் ஸ்ரான்லி கல்பகேயும் கலந்து கொண்டனர்.

இலங்கையிலிருந்து தமிழ் அகதிகள் இந்தியாவுக்குப் பெருமளவில் வராதமுறையில் நிலைமையைச் சீராக்க வேண்டுமென்றும் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்றும் இந்தியவெளியுறவுச் செயலர் துபே கூறியயோசனையை இலங்கைத் தூதுக்குழு ஏற்றுக் கொண்டதாக இந்தியஅரசியல் அதிகாரி ஒருவர் பின்னர் தெரிவித்தார்.

### நேற்றும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் நின்ற பட்டிவலையில் சிக்கிக் கிடந்த சடலத்தை நேற்றுக்காலை 11 மணிக்கு கரைக்கு சில இளைஞர்கள் எடுத்து வந்தனர். பின் அடையாளம் காணப்படாமலேயே புதைக்கப்பட்டது. (21)

# முகாமிற்கு வெளியில் துப்பாக்கி ரவைப் பார்சல்கள்

(கிளிநொச்சி)

ஹெலிக்கொப்டர் விமானத்திலிருந்து கிளிநொச்சி இராணுவ முகாமுக்குள் போடப்பட்ட பல துப்பாக்கி ரவைப் பார்சல்களில் சில முகாமுக்கு அண்மையிலுள்ள காணிகளுக்குள் விழுந்துள்ளன. விடுதலைப் புலிகள் அப் பார்சல்களை எடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்ட பார்சல்களுக்குள் பெருந்தொகையான துப்பாக்கி ரவைகளுப் 10ஆம் 11ஆம் 12 ஆம் திகதி கொழும்புப் பத்திரிகைகளும் இருந்தனவாம். மேலும் சில பார்சல்கள் முகாமுக்கு வெளியே விழுந்துள்ளன. இருபாலாராலும் அவை எடுக்கப்படமுடியாத பகுதியில் விழுந்துள்ளன.

# தமிழ்நாட்டில் திட்டமிட்டபடி ஹர்த்தால் நடை பெறும்

(சென்னை)

அப்பாவித் தமிழ் மக்கள் இலங்கை அரசினால் கொல்லப்படுவதை கண்டிக்கும் வகையில் தமிழகத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள பொது வேலை நிறுத்தமும் ஹர்த்தாலும் திட்டமிட்டபடி நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை நடைபெறும் என முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அறிவித்துள்ளார்,

ஹர்த்தால் தினமான அன்றைய தினம் பொது விடுமுறைத்தினமாக தமிழக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அரச அலுவலகங்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களும் இயங்க மாட்டாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலை ஆறுமணி முதல் மாலை ஆறு மணி வரை மேற் கொள்ளப் படவுள்ள இந்த ஹர்த்தாலையொட்டி விமான சேவைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட உள்ளதுடன், ரயில் உட்பட அனைத்துப் போக்குவரத்து சேவைகளும் நடைபெற மாட்டாதென்றும் கூறியுள்ளார்.

இதேவேளை அத்தியாவசிய சேவைகளான மருத்துவம் நீர் விநியோகம் பத்திரிகை என்பன வழமை போல் இயங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# சௌதாலா முன்மொழிய புதிய முதல்வர் தெரிவு

(டில்லி)

ஹரியானா புதிய முதலமைச்சராக உக்கம்சிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஓம் பிரகாஷ் சௌதாலா ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே இவர் நேற்றுக் காலை புதுடில்லியில் நடைபெற்ற மாநில சட்ட சபை ஜனதாதள் கட்சிக் கூட்டத்தில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முதலமைச்சர் பதவியில் இருந்து விலகிய ஓம் பிரகாஷ் சௌதாலே இவருடைய பெயரை முன்மொழிந்தார்.

அமோக ஆதரவு ஓம் பிரகாஷ் சௌதாலாவுக்கு இருந்த போதும் அவர் ராஜினாமாச் செய்ததை ஜனதாதள் சட்டசபை புகழ்ந்திருக்கிறது.

### இருபத்தெட்டு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்து சிறையில் வைக்கப்பட்டிருந்தவர்களின் உடல்களே இவ்வாறு எரிக்கப்பட்டன. (ம)

வந்தனர். அச் சமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர். இராணுவம் பார்சல்களை எடுக்காமல் பின்வாங்கி விட்டது.

பின்னர் செஞ்சிலுவைச் சங்கத்துக்குச் சொந்தமான வாகனங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தபோது அவ் வாகனங்களுக்குப் பின்னால் இராணுவத்தினர் மறைந்து வந்த பொழுது போராளிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

பின்பு இராணுவம் முகாமுக்கு பின்வாங்கிச் சென்று ஆட்டிலறி செல் தாக்குதலை மேற் கொண்டது. இத் தாக்குதலில் செஞ்சிலுவைச் சங்கப் பிக்கப் வாகனம் ஒன்று சேதமடைந்துள்ளது. செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவரும் காயமடைந்துள்ளார்.



யாழ். கோட்டை இராணுவம் நேற்று முன்தினம் மாலை மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வீரமரணம் அடைந்த லெப்டினன்ட் ஜிம் பிறவுணுக்கு (பரராசசிங்கம்-மகேந்திரம்) நேற்று திரளான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச்செலுத்திய அதேவேளை விடுதலைப்புலிகளும் தமது வீரவணக்கத்தைச் செலுத்தினர்.

இவர் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது,

## மரண அறிவித்தல்

### சிவானந்தன் - சந்தானமலர்

மீசாலை தெற்கு சிவானந்தன்-சந்தானமலர் (சாந்தி) 17-7-90 அன்று காலமாகிவிட்டார். இவர் சதாசிவம்-சிவானந்தனின் அன்பு மனைவியும் செந்தூரன், மயூரன், ரமணன், லக்ஷியாவின் அன்பு தாயாரும், காலம்சென்ற பொன்னம்பலம் சின்னம்மா, (தில்லையம்மா)வின் அன்பு மகளும், காலம்சென்ற கனகசபை-சதாசிவம் விதானையாரின் மருமகளும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியை 18-7-90 இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ப. சிவநாதன்
(மீசாலை தெற்கு சிற்றூரவை உப தலைவர்)

(R530)

## பணிவான வேண்டுகோள்

பொத்துவில் R. M. P. திரு. நா. கணேசபிள்ளை காலமாகிவிட்டார் என்ற செய்தியை நேற்று எனது முகவரியில் வந்து அறிவித்தவர் தயவு செய்து என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

R. S. செல்வத்துரை, 131/1,
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(R 528)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது